# உச்ச நீதிமன்ற பதவிகளுக்கு நீதிபதிகளை நியமிக்கவோ பரிந்துரைக்கவோ ஜனாதிபதிக்கு இடைக்காலத் தடை!

## உச்ச நீதிமன்றம் நேற்றுப் பிறப்பித்தது



**பிரதம நீதியரசர்பதவியைத்தவிர ஏனைய உச்ச நீதிமன்ற நீதிபதிகள்பதவிகளுக்கு நீதிபதிகளை நியமிக்கவோ அல்லது அரசியலமைப்பு சபைக்கு பரிந்துரைக்கவோ முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உச்ச நீதிமன்றம் நேற்று (30) இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தது.**

**நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்காததை சவாலுக்கு உட்படுத்தும் அடிப்படை உரிமை மீறல் மனு மீது இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை இந்த இடைக்காலத் தடை உத்தரவை அமுல்படுத்துமாறு உயர் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டுள்ளது.**

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 18 புதன்கிழமை 01.05.2024 கதிர் 246

# வீதி சமிக்ஞை விளக்குகள் அருகில் யாசகர்களுக்கு பணம் வழங்கும் சாரதிகள் அபராதம் விதிக்கப்படும்

## சட்டம் கடுமையாக்கப்படும் என்கிறார் பிரதி பொலிஸ் மா அதிபர்

கொழும்பு உட்பட நாட்டின் பிரதான சந்திகளில் சமிக்ஞை ஒளி விளக்குகள் அருகில் வாகனங்களில் பணம் பெறுகின்ற யாசகர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் எனவும், இதற்கென கடமையிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக சிவில் உடையிலுள்ள பொலிஸ்குழுக்களும்சமிக்ஞை விளக்குகள் அருகில் நிறுத்தப்படவுள்ளதாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (போக்குவரத்து நிர்வாகம் மற்றும் வீதி பாதுகாப்பு) இந்திக்க ஹப்புகொட தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்



கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், யாசகர்களுக்கு பணம் வழங்க வாகன ஓட்டிகள் அல்லது பயணிகள் முயன்றால் அவர்களுக்கும் அபராதம்

2➤

# ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்காதவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றே நான் கூறினேன்

## கர்தினால் மல்கம் ரஞ்சித் அறிக்கை மூலம் தெரிவிப்பு

எந்தவொரு கட்சிக்கும் வாக்களிக்குமாறு என்றுமே தான் கூறியதில்லை எனவும், ஈஸ்டர் தாக்குதலுக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுக்காதவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றே தான் கேட்டுக் கொண்டுள்ளதாக கொழும்பு பேராயர்மல்கம்கர்தினால் ரஞ்சித் அறிக்கையொன்றினூடாக தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:ஈஸ்டர்தாக்குதலின் உண்மைத்தன்மையை விசாரித்து உண்மைகளை வெளிப்படுத்துவதுடன் அதற்கான திட்டங்களையும் முன்வைத்த



ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சியினர் இது விடயமாக நம்மிடம் உறுதி மொழிகளையும் வழங்கியுள்ளனர் என்றே நான் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் மட்டுமல்ல ஏனைய அரசியல் கட்சிகளும்

2➤

# விமான நிலையத்தில் தங்க விற்பனை நிலையம் திறக்க அமைச்சரவை அனுமதி

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை நடத்துவதற்கான விலை மனு கோரலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பயணிகளுக்கு தங்க நகைகள் வாங்கும் வசதிகள்

2➤




# புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மே தினப் பேரணியும் கூட்டமும் வவுனியாவில்

“உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம்! நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம்!!” - எனும் தொனிப்பொருளில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலமும், பொதுக்கூட்டமும் இன்று காலை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய மே தின ஊர்வலம் பஜார்வீதி ஊடாக வவுனியா நகர மண்டபத்தை அடைந்தது.

2➤

# திகாவின் மே தினக் கூட்டத்தில் சஜித்



தொழிலாளர் தேசிய சங்கத்தின் மே தினக் கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் இன்று நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விசேட அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ கலந்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க, தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட

2➤

# மே தினத்தில் சேரும் குப்பைகளை பெருக்கி சுத்தப்படுத்த 1000 பணியாளர்கள் கடமையில்

தொழிலாளர் தினமான இன்றைய தினம் ஏராளமான மக்கள் மேதின பேரணியில் கலந்து கொள்ளவும் பார்வையிடவும் கொழும்பு நகர் நோக்கி வருகின்றமையால் கொழும்பு நகரில் சேரக்கூடிய குப்பைகளை அகற்றுவதற்காக 1000 பேரைக் கொண்ட பணியாளர்கள் குழுவொன்று பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என கொழும்பு மாநகர திடக்கழிவு முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர் பொறியாளர் ஷாஹினா எம்.மைஷான் தெரிவித்துள்ளார்.

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## வீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விதிக்கப்படும் எனவும் அவர் இங்கு குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், யாசகர்களுக்கு வானங்களில் உள்ளவர்கள் பணம் கொடுப்பதை தவிர்த்தால், யாசகர்கள் சமிக்ஞை விளக்குகளுக்கு அருகில் நிற்பதை தவிர்ப்பார்கள் எனவும், கடந்த வாரம் மின்விளக்குகளுக்கு அருகில் யாசகம் பெற்ற 94 யாசகர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர் எனவும் தெரிவித்ததுடன், இவ்வாறு யாசகர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டாலும், அவர்கள் நீண்ட நாட்களுக்கு சிறையில் அடைக்கப்படுவதில்லை, அபராதம் விதிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுகின்றனர். பிணையில் வெளியே வந்த பின்னரும் அவர்கள் வழக்கமான யாசக தொழிலை தொடர்கின்றனர் என்றார்.

சிலர் சிகப்பு விளக்கு எரியும் போது யாசகம் புரிவதுடன், அந்த சந்தர்ப்பங்களில் பல்வேறு விபத்துகள் நடக்கின்றன. சில யாசகர்கள் வேண்டுமென்றே வாகனங்கள் மீது மோதுகின்றனர். இன்னும் சிலர் நாணயக் குற்றிகளினால் வாகனங்களை உராய்ந்து சேதப்படுத்துகின்றனர். எனவே, இத்தகைய நிலையை தடுப்பதற்கு வாகனங்களில் செல்வோர் சமிக்ஞை விளக்குகளின் அருகே யாசகர்களுக்கு யாசகம் வழங்கும் வழக்கத்தை தவிர்க்க வேண்டும் எனவும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கேட்டுக் கொண்டார். (ரெம-02)

## உச்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எஸ். துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவை உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரை செய்த போதிலும் சபாநாயகர் உட்பட அரசியலமைப்பு சபையும் அந்த பரிந்துரைகளை பின்பற்றவில்லை எனவும் இதனை அடிப்படை மனித உரிமை மீறல் என்ற முடிவிற்கு வருமாறு கோரி சட்டத்தரணி பத்திரத்ன இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தார்.

அடிப்படை உரிமைகள் மனுவை விசாரிக்க அனுமதி அளித்த நீதிபதி குழாம், மனுவை ஒக்டோபர் 4 ஆம் திகதி விசாரிப்பதாக அறிவித்தார். மனுதாரரின் சட்டத்தரணி சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி பைசர் முஸ்தபா முன்வைத்த நீண்ட விளக்கங்களை பரிசீலித்தே நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

மேற்படி மனுவில் சபாநாயகர் உட்பட அரசியலமைப்பு சபையை எதிர்மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. சட்டமா அதிபர், சபாநாயகர் மற்றும் பிரதமர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வாவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் கபீர் ஹாஷிம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவராக கடமையாற்றுகின்ற நிஷங்க பந்துல கருணாரத்னவை அவரது சேவை காலம் மற்றும் அனைத்து விடங்களையும் கருத்தில் கொண்டே வெற்றிடமாக உள்ள உச்சநீதிமன்ற நீதிபதி பதவிக்கு அவரை நியமிக்குமாறு அரசியலமைப்பு சபைக்கு ஜனாதிபதி பரிந்துரை செய்துள்ளதாக மனுதாரரின் வழக்கறிஞர் தனது மனு மூலம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார். இருப்பினும், மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாதன் மூலம், அரசியலமைப்பு சபையானது நீதித்துறையின் சுதந்திரத்தை பாதிக்கும் விதமாக நடந்து கொண்டுள்ளது எனவும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார். (ரெம-01)

## ஈஸ்டர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்வாறே செயற்பட வாய்ப்பு உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து நியாயமான மற்றும் வெளிப்படையான விசாரணையை நடத்துமாறு அன்று முதல் இன்று வரை அனைத்து அரசியல் தரப்புகளையும் நாங்கள் கேட்டு வந்துள்ளோம். எனவே, அத்தகைய தீர்வை வழங்கும் எந்தவொரு கட்சிக்கும் வாக்களிக்க இந்த நாட்டின் அனைத்து மக்களையும் ஊக்குவிக்க நான் விரும்புகிறேன். அதேபோன்று, சில எம்.பி.க்கள் என் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து நாடாளுமன்றத்தில் அடிப்படையற்ற வகையில் நடந்து கொண்டுள்ளனர். இது வருந்தத்தக்கது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பின்றி தங்களுக்கு ஏற்றாற் போல் வாய்க்கு வந்தபடி குற்றம் சாட்டுவது உண்மைக்கும் நீதிக்கும் எதிரான பாவம் என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொண்டால் அது மிகவும் நல்லதே. (ரெம-03)

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கு பிரதான மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

இதில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொது அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் அரசுக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

## மேதினத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏனைய நாட்களில் கொழும்பு நகரை துப்பரவு செய்கின்ற 700 தொழிலாளர்களுக்கு மேலதிகமாக இன்னும் 300 பேர் இவ்வாறு பணியில் அமர்த்தப்பட்டுள்ளதாக மைஷான் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் நடத்தும் மே தின கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் மூலம் இன்று கொழும்பில் சேரும் கழிவுகளை துரிதமாக அகற்றுவதே இந்த குழுவின் முதன்மை நோக்கமாகும் எனவும், 1000 க்கும் மேற்பட்ட இந்த உழைப்பாளர் படை 24 மணி நேரமும் இரவு, பகல் பாராமல் தமது பணிகளை மேற்கொள்வர் எனவும் ஷாஹினா மைஷான் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-04)

## திகாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார், தொழிலாளர் தேசிய சங்கத்தின் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.ஸ்ரீதரன், சரஸ்வதி சிவகுரு, பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (அ)

## விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லாததால், அதனை கவனத்திற் கொண்டே பயணிகளுக்கான புறப்படும் பகுதியில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை அமைக்க எயார் போர்ட்ஸ் என்ட் ஏவியேஷன் சேர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பண்டாரநாயக்க விமான நிலையத்தில் தங்க ஆபரண விற்பனை நிலையமொன்றை திறப்பதற்கும் அதற்குரிய விற்பனை நிலையத்தாரை கண்டறிவதற்கான விலைமனு கோரும் பிரேரணை, துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் நிமல் சில்பால டி சில்வாவினால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரெம-05)

# பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில்

பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி என்பன இணைந்து யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி சரஸ்வதி அரங்கில் நூற்றாண்டு விழாவை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரையிலும், மறுநாள் 12ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மதியம் வரையில் நடைபெறவுள்ளது.

நூற்றாண்டு விழாவின் இரு நாள் நிகழ்வுகளிலும் அனைவரும் கலந்து கொள்ள கலாநிதி தி. கமலநாதன் யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அழைப்பு விடுத்துள்ளார்.

# மூதூரில் துப்பாக்கிச்சூடு

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியவெளி கிராமத்தில் நேற்றிரவு துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

ஆவா குழு எனத் தங்களை வெளிப்படுத்தி வரும் குழுவொன்றால் வெளிநாட்டில் இருந்து வருகை தந்துள்ள ஒருவரைக் கொலை செய்யும் நோக்கத்தோடு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது மேற்படி நபர் தப்பியோடியுள்ளார். இது தொடர்பாக அந்த நபரால் மூதூர் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. எனினும், இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று முறைப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் உதவியுடன் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (அ)

# மலைநாட்டு மக்களுக்கு காணி உரிமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உறுதி!

மலை நாட்டு மக்களை காணி உரிமையாளர்களாக மாற்றுவேன், என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தலைமையில் இன்று புதன்கிழமை தலவாக்கலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்தார். (04)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வீட்டு மட்ட பயனாளிகளை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு



(எம்.எம்.றம்ஸீன்)

சமூக சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிறந்த சுய உதவிக்குழு, சிறந்த சுய சக்தி அங்கத்தவர் மற்றும் சிறந்த வீட்டு மட்ட பயனாளியை தெரிவு செய்வதற்கான நேர்முக தேர்வு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட குழு மூலம் நேர்முக தேர்வானது ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலிருந்தும் வருகை தந்த சுய உதவிக் குழுக்களுக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், மாவட்ட செயலக சமுர்த்தி முகாமையாளர், மாவட்ட சமூக சேவைகள் இணைப்பாளர், மாவட்ட என்எஸ்பிடி இணைப்பாளர், மாவட்ட முதியோர் செயலகத்தின் இணைப்பாளர், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 2 இற்கு பதவி உயர்வு!

(வி.ரி. சகாதேவராஜா)



திருக்கோவில் வலயக்கல்விப் பணிமனையின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அலியார் நசீர், இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 2 இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார்.

சம்மாந்துறை வலய கோட்டக் கல்விப்பணிப்பாளராக, உடற்கல்வி பாட உதவிக் கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங்கள் பணியாற்றிய நிந்தவூரைச் சேர்ந்த ஜனாப்.ஏ.நசீர் கடந்த வாரம் திருக்கோவில் வலயத்திற்கு இடமாற்றலாகிச் சென்றிருந்தார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவின் வழிகாட்டலில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக சம்மாந்துறை கோட்ட கல்வி காரியாலயம் புதுப் பொலிவு பெற்று தற்போது சிறப்பாக காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.






# மிதி வெடி

"மாஃபியா" எண்டொரு சொல்லுக் கேள்விப்பட்டிருக்கிறியளே?

"பொலிற்றிக்கல் மாஃபியா", "மீடியா மாஃபியா", "பிஸினஸ் மாஃபியா" எண்டு கனக்க கேள்விப்பட்டிருப்பியள்.

"பொலிற்றிக்ஸ்" குள்ள "மீடியா" பூந்து விளையாடுறதுக்கு எங்கட தமிழ் அரசுக் கட்சி நல்ல உதாரணம் எண்டது ஊரறிஞ்ச விசியம்!

உள்நாட்டு "மாஃபியா" க்களுக்குள்ள இப்ப இஞ்ச - அதானுங்கோ - யாழ்ப்பாணத்தில கொடிகட்டிப் பறக்கிறது "மெடிக்கல் மாஃபியா" தான்!!!




யாழ்பாணச் சனத்தை எந்தக் "கொம்பனி" மருந்தை வாங்க வைக்கிறது எண்டதில இருந்து, எத்தெந்த ஆய்வு கூடங்களுக்கு உழைப்புக் குடுக்கிறது எண்டது வரையும் இந்த "மாஃபியா" க்கள் தான் தீர்மானிக்கிறதாம்.

நான் பொய்க்குச் சொல்லேல்லப் பாருங்கோ! பின்னேரத்தில நீங்கள் ஒருக்கா பரமேஸ்வராச் சந்தியில இருந்து பலாலி வீதி வழியா ஆரியகுளம் வரையும் போயிற்று வாங்கோ, உங்களுக்கு விளங்கும்.

என்ன சனமப்பா. இவ்வளவு சனமும் கொட்டிக்குடுக்கத் தயாராய் வச்சிருக்குதுகள் போல.? அந்தந்த இடங்களில விலத்த முடியாத சனம் எண்டதை விட, வீதி முழுக்க எவ்வளவு நெருக்கடி எண்டது அதால போய் வாறவைக்குத் தெரியும்.

அந்தக் காலத்தில, ஆஸ்பத்திரி வீதியில ஒண்டோ ரெண்டு "பிரைவேட் கிளினிக்" மாத்திரம் இருந்துச்சு! இப்ப பலாலி வீதியில மூலைக்கொண்டு முளைச்சிருக்குது.

"கொரோனா" பெரு முடக்கமா இருக்கட்டும், பொருளாதார நெருக்கடி - "பெற்றோல்" தட்டுப்பாடா இருக்கட்டும் - யாழ்ப்பாணத்தில இருக்கிற தனியார் வைத்தியசாலையளுக்குச் சனம் போறது குறைஞ்சிருக்கோ? குழந்தைப் பிள்ளையளில இருந்து குடு, குடு கிழடுகள் வரை அள்ளிக்குடுக்கத் தயாரா இருக்கேக்க, கொள்ளையடிக்கிறவை ஏன் யோசிக்கப் போயினம்?

எந்த ஆசுப்பத்திரிக்குப் போனியள் எண்டாலும், "ஹொஸ்பிரல்" கட்டணம் எண்டு சில ஆயிரங்கள், "கொண்ஸல்ரேசன்" எண்டு சில ஆயிரங்களைப் புடுங்கிக் கொண்டு தான் வரிசையில இருக்கவே விடுவினம்.

சரி, காசு குடுத்துத் தானே காட்டுறம், நேர காலத்துக்குப் பாப்பினமோ எண்டால் அதுவும் இல்லை!

6 மணிக்கு வாற "டாக்குத்தரு" க்குக் காட்ட, 5 மணிக்கு நிக்கவேணும் எண்டு வினம். நோயாளிகளும் ஆர்வக் கோளாறில நாலரை மணிக்கே வந்திடுவினம்.

ஆ.. இந்தா வாறார. அந்த வாறார் எண்டு அவையும் சொல்ல. வந்துடுவார், வந்துடுவார் எண்டு நாங்களும் "அணிலேற விட்டது" போல வழி மேல் விழி வைச்சுக் காத்திருக்க வேண்டியது தான்.

அயலில இருக்கிற இன்னொரு "ஹொஸ்பிரல்" ல ஆக்கள் அதிகமாப் போனதால ஆறரை, ஏழு மணிக்கு ஆடிப்பாடி ஐயா வந்து சேருவார்.

இதுக்குப் பிறகும் இன்னொரு "ஹொஸ்பிரல்" ல "அப்பொயின்ற்மென்ற்" இருக்கிறதால ஆற, அமர ஆரையும் பாக்கேலாது. ஆகக் குறைஞ்சது நாலு "ரெஸ்ற்", ஒரு "ஸ்கான்" இல்லாட்டி "எக்ஸ்றே" எண்டு ஒரு "லிஸ்ற்" போட்டுத் தரப்படும்.

நோயாளியைப் பாத்ததுக்காகக் கிடைக்கிற "கொண்ஸல்ரேசன்" கட்டணத்தை விட "ரெஸ்ற்" களுக்கு ஐயாவோ, அம்மணியோ "ரிஃபர்" பண்ணி விட்டதுக்காகவும் ஒரு "பேர்சன்ரேஜ்" அவையின்ர கணக்கில விழும்!!

சிகிச்சைக்குப் போன நோயோட சம்பந்தம் இருக்கோ இல்லையோ, "ரெஸ்ற்" எழுதாட்டி அவருக்கு மரியாதை இல்லைப் பாருங்கோ.

"ரெஸ்ற் ரிப்போர்ட்" காட்டுறதுக்கெண்டு திரும்ப வாறவெக்கு நல்ல "கொமிஷன்" தாற "கொம்பனி" யின்ர மருந்து தான் எழுதுப்படும. அப்பிடி தாங்கள் சொல்லுற மருந்தை எழுதாமல் விட்டால் அந்த "ஹொஸ்பிரல்" ல அவர் தொடர்ந்து வேலை பாக்கிறது கஸ்டம் பாருங்கோ.

உப்பிடித்தான் "வடக்கின்ர மத்தியில்" இருக்கிற ஒரு வைத்தியசாலையில வேலைக்குப் போன "டாக்குத்தரி"ட்ட தாங்கள் சொல்லுற மருந்தைத் தான் எழுத வேணும் எண்டு சொல்ல மனச்சாட்சிக்குப் பயந்த சில "டாக்குத்தர்" மார் வேலையே வேணாம் எண்டு போன கதையளும் இருக்குப் பாருங்கோ.

என்னதான் "பிறைவேற்றில" பார்த்தாலும், "ஸ்கான்" முதல் கொண்டு தேவையான "ரெஸ்ற்" முழுவதையும் பெரியாஸ்பத்திரியில செய்யுங்கோ எண்டு சொல்லுற ஆக்களும் இருக்கத் தான் செய்யினம்!

"இங்க வாங்கினால் மருந்து விலை கூடத் தான், நீங்கள் வெளியால வாங்கிறதெண்டாலும் வாங்கலாம்" எண்டு பட்டும் படாமல் சொல்லுவினம். நூற்றுக்கு ஒண்டிரண்டு பேர் தான் அப்பிடி இருக்கினம் பாருங்கோ.

ஆனா சத்தியமாச் சொல்லுறன், நான் இண்டைக்குச் சொல்ல வந்த விசியம் வைத்தியர்களைப் பற்றினதில்லைப் பாருங்கோ.. "மெடிக்கல் மாஃபியா" பற்றித் தான் பாருங்கோ. !

போன கிழமை நடந்த ஒரு சம்பவத்தைச் சொல்லி முடிக்கிறன். பொறுங்கோ..

நேரெதிரா இருக்கிற ரெண்டு "ஹொஸ்பிடல்" களைப் பற்றின கதை தான் இது பாருங்கோ..

"பப்ளிக்கில" ரெண்டு பேருக்கும் கடும் வெட்டுக்குத்து எண்டு கதை அவேக்குள்ள நேரடியாச் சண்டை இல்லாட்டிலும், அவர் கட்டிடம் கட்டினால் இவர் "பெட்டிசன்" போடுவார், இவர் "பில்டிங்" ஐக் கொஞ்சம் நீட்டினால் அவர் ஆள் வைச்சுக் கேஸ் போடுவார். அந்தளவுக்கு அவைக்குள்ள பனிப்போர்...

ஆனால், "ஆடு பகை - குட்டி உறவு" (5ஆம் பக்கம் பார்க்க...)

# தோட்டத் தொழிலாளரின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிப்பு

## இ.தொ.காவின் மே தினக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை தான் ஒருபோதும் மறக்கவில்லை எனவும், ஜனாதிபதி என்ற வகையில் எதிர்காலத்தில் அவர்களின் உரிமைகளைத் தான் உறுதிப்படுத்துவேன் அவர் கூறினார்.

கொட்டகலை பொது மைதானத்தில் இன்று முற்பகல் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த நிகழ்வில் இணைந்துகொண்டதுடன், மைதானத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் தலைவரான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் மே தினக் கூட்டமும் பேரணியும் நடைபெற்றது.

மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மலையக மக்களால் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

“லயன் அறைகள் சட்டபூர்வமான கிராமங்களாக மாற்றப்பட்டு அவற்றின் வசதிகள் மேம்படுத்தப்படும். பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி மற்றும் தொழில்சார் கல்வியை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படும்.

கடந்த கால பொருளாதார நெருக்கடியின்போது பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட போதிலும் நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்குப் பெருந்தோட்ட மக்கள் ஆற்றிய பங்களிப்புக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

நாங்கள் அனைவரும் மிகவும் கடினமான காலத்தைக் கடந்து வந்துள்ளோம். இதன்போது பெருந்தோட்ட மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டனர் என்பதை நாம் அறிவோம்.

ஆனால், சிரமங்கள் இருந்தபோதிலும், அவர்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதன் மூலம் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களித்தனர். 2023 ஆம் ஆண்டிலும் 2024 ஆம் ஆண்டிலும் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அந்நியச் செலாவணியைப் பெற்றோம். அதற்கு ஜனாதிபதி என்ற வகையில் நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

உங்களின் கடின உழைப்புத்தான் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியது என்றே கூற



வேண்டும். 2022 இல் நாடு இருந்த நிலைக்கு மீண்டும் செல்வதை இங்குள்ள யாரும் விரும்பவில்லை என்று நினைக்கிறேன். அதற்கு நாங்கள் யாரும் தயாராக இல்லை. நாங்கள் மிகவும் மோசமான சூழ்நிலைக்குச் சென்றோம்.

தற்போது இந்த நாட்டின் பொருளாதாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப்பெற்றுள்ளது. தற்போது அனைவருக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டது. மேலும், அஸ்வெசும திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் நிவாரணத்துக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் தனியார் துறையினரும் சம்பளத்தை அதிகரித்துள்ளனர்.

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பால், சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளது. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளை நாம் மறக்கவில்லை.

இந்த லயன் அறைகளை சட்டபூர்வமாக கிராமங்களாக அறிமுகப்படுத்த நானும் பிரதமரும் ஆலோசித்துள்ளோம். அதன் மூலம் இந்த இடங்களுக்கு கிராமங்களுக்கு கிடைக்கும் வசதிகள் கிடைக்கும்.

அதற்கான செயற்பாடுகளை அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் இணைந்து தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன் பெருந்தோட்டப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கு விஞ்ஞானப் பாடங்களை கற்பிக்க தேவையான ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நான் பிரதமராக இருந்த போது தோட்டங்களில் உள்ள பல பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஆரம்பித்தேன். சில பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையைத் தீர்த்து, அவற்றை மேம்படுத்தும் பணியும் இடம்பெற்று வருகிறது. மேலும், பெருந்தோட்டங்களில் தொழிற்கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மறக்கவில்லை. அந்த மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் நான் புரிந்துகொண்டுள்ளேன்.

எனவே, எனக்குக் கீழ் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் என ஜனாதிபதி என்ற வகையில் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

1982 ஆம் ஆண்டு சௌமியமூர்த்தி தொண்டமானின் வேண்டுகோளுக்கிணங்க நான் அப்போதைய கல்வி அமைச்சராக பெருந்தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். பின்னர் 1986 இல் குடியுரிமை இல்லாதவர்களுக்கு குடியுரிமை வழங்குவதாக ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன அறிவித்தபோது நானும் அதற்கு ஆதரவளித்தேன்.

2003 ஆம் ஆண்டில் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து இந்தியாவில் குடியுரிமை இருந்தும் மீண்டும் அங்கு செல்ல விரும்பாத மக்களுக்கு குடியுரிமை வழங்கப்பட்டது. தற்போது அந்த பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்டன.

இப்போது இந்த பகுதிகளை முன்னேற்றுவதற்கான நேரம் இது. எனவேதான் சம்பளத்தை அதிகரித்து இந்தப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். மேலும், விவசாய நவீனமயமாக்கல் திட்டம் கிராமத்துக்கு மட்டுமல்ல, பெருந்தோட்டத்துக்கும் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” - என்றார்.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரும் இந்நிகழ்வில் உரையாற்றினார்கள்.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நசீட், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், பிரதித் தலைவி அனுஷியா சிவராஜா, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் பாரத் அருள்சாமி உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ)

## தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் அதிகரிப்பு அரச வர்த்தமானியும் இன்று மே தினத்தில் வெளியாகியது!

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை அதிகரிப்பது தொடர்பான அரச வர்த்தமானி வெளியாகியுள்ளது.

மேற்படி வர்த்தமானியில், தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த ஊதியம் 1,700 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நாளாந்த ஊதியம் 1350 ரூபாவாகவும், நாளாந்த மேலதிக கொடுப்பனவு 350 ரூபாவாகவும் வழங்கப்படும் என்பதுடன், நாளாந்த ஊதியமாக 1700 ரூபாய் வழங்கப்படும் என குறித்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வினை வழங்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொட்டகலையில் இடம்பெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (04)

## யாழில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம்




இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று காலை இடம்பெற்றது.

நல்லூர் ஆலயத்துக்கு அருகில் இருந்து ஆரம்பித்த பேரணி கிட்டு பூங்காவில் நிறைவடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# கற்பிட்டி அல் அக்ஸாவில் சாதாரண தர மாணவருக்கான இறுதிச் செயலமர்வு







(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசியப் பாடசாலையில் இம்முறை சாதாரண தரப் பரீட்சை எழுத உள்ள மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர் நிலைக்கு கொண்டு செல்லும் நோக்கோடு பாட ரீதியாக தொடராக இடம்பெற்ற இலவச தொடர் கருத்தரங்குகளின் இறுதியாக சித்திரப் பாட செயலமர்வு நேற்று (30) இடம்பெற்றது.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இறுதிச் செயலமர்விற்கான அனுசரணையை 2000 ஆம் ஆண்டு சாதாரண தர பழைய மாணவர்கள் வழங்கி இருந்தனர். கற்பிட்டி அல் அக்ஸா தேசியப் பாடசாலையின் பழைய மாணவரும் 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சுமார் 10 வருடங்கள் அல் அக்ஸா தேசிய பாடசாலையில் சித்திர பாட ஆசிரியராக பணியாற்றியவரும், தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னால் விரிவுரையாளரும், கல்வி அமைச்சின் சித்திர பாட சிரேஷ்ட வளவாளராகவும், சித்திர பாட ஆசிரியர் ஆலோசகராகவும் செயல்பட்டு வரும் இலங்கையில் பிரபலமான சித்திர பாட வளவாளர் எம்.எம். மொஹமட் ஆசிரியரால் இறுதி கருத்தரங்காக சித்திர பாட செயலமர்வு நடாத்தப்பட்டது.

# சிலோன் ஜேனலிஸ்ட் போரத்தின் உலகத் தொழிலாளர் தின நிகழ்வு



(எம்.ஏ.றமீஸ்)

உலகத் தொழிலாளர் தினத்தினையொட்டி சிலோன் ஜேனலிஸ்ட் போரத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மே தின நிகழ்வு அட்டாளைச்சேனை சந்தை சதுக்கத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.எஸ். எம். ஜஃபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புக்களை நல்க வேண்டுமென வலியுறுத்திய பதாதையில் பல்தரப்பட்ட பெருந் தொகையானோர் தமது கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.

இதன்போது உலகிலுள்ள ஊடகவியலாளர்கள் ஒற்றுமையாகவும், சுதந்தரமாகவும் செயற்பட வேண்டுமென விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றதுடன், நிகழ்வின் நினைவாக மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதேவேளை, உலகிலுள்ள ஊடக தொழிலாளர்கள், சாதாரண தொழிலாளர்கள் போன்றோர் தமது உரிமையுடன் செயற்படுவதற்கு ஏதுவான சூழல் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விசேட சொற்பொழிவும் இதன்போது இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள், பொதுமக்கள், கல்வியியலாளர்கள், மார்க்க அறிஞர்கள், சமூக சேவையாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கல்

(வி.ரி. சகாதேவராஜா)

புத்த சாசன மற்றும் மத கலாசார அலுவல்கள் அமைச்சின் திருக்கோவில் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்ற பல்வேறு பயிற்சி நெறிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் கலந்துகொண்டார்.

ஏனைய அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் திருமதி.எஸ்.நிருபா, கிராம பொறுப்பான நிருவாக உத்தியோகத்தர் என்.கந்தசாமி, பொதுமக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் பல கண்கவர் கலைநிகழ்ச்சிகளும் மேடையேறின.




## மிதி வெடி

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எண்டுமாப் போல காசு புடுங்குற விசியத்தில ரெண்டு பேரும் கூட்டாம்.. !!!

கொஞ்ச நாளுக்கு முன்னால "ஹொஸ்பிட்டல் 2" க்குப் போன நோயாளிகளுக்கு, "ஹொஸ்பிட்டல் 1" ல "ரீட்மென்ற்" நடந்திருக்கு. கேட்டால் "கொண்சல்ட்டன்" க்கு நேரமில்லையாம்.

அம்மணி 6 மணிக்கு வருவா எண்டு 5 மணிக்கே வரச் சொல்லியிருக்கினம். 5 மணிக்கு வர முன்னம் 6 மணித்தியாலம் எதுவும் சாப்பிடக் கூடாதாம். கடைசி 3 மணித்தியாலங்களும் தண்ணி நல்லாக் குடிச்சிருக்க வேணுமாம், எண்டு ஒரு பிள்ளைத் தாச்சிப் பொம்பிளை பகல் 11 மணிக்குப் பிறகு சாப்பாடே இல்லாமல் வந்திருக்கிறா.. 2 மணியில இருந்து குடிச்ச தண்ணி சலம் வலம் போகவும் வழியில்ல. கிட்டத்தட்ட 7 மணித்தியாலமா அந்த அம்மா அவஸ்தைப்பட, பார்க்க வேண்டிய அம்மணி 7 மணிக்கும் இங்க வரேல்ல.

"புக்கிங்" செய்த சனங்கள் குழம்பத் தொடங்க, சரி வாங்கோ முன்னால கொண்டு போய் விடுறம் காட்டிற்று வாங்கோ. எண்டு "நேர்ஸ்" மார் "ஸ்கொட்" பண்ணி கூட்டிக் கொண்டு போயிருக்கினம்.

அங்க போனா, அந்த அம்மணியிற்ற காட்டுறதுக்காக இருபத்தைஞ்சு சனம் வரிசையில இருக்குது. வரிசைய வெட்டி, கூட்டிக் கொண்டு போனவையக் காட்டுவிச்சது அந்த "நேர்ஸ்" மாரிண்ட கெட்டித்தனம். அதை விடுவம்.

என்ர கேள்வி என்னெண்டா, அந்த அம்மணி இந்த "ஹொஸ்பிடல்" க்கு வரமாட்டா எண்டால் ஏன் "புக்" பண்ணினவை?

அவ வரமாட்டா எண்டு சொல்லியிருந்தால், நோயாளியள் நேரா முன்னுக்கிருக்கிற "ஹொஸ்பிடல்"யே காட்டியிருப்பினமே? பசியோட்டையும், இயற்கை உபாதையோடும் அவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டியதில்லையே?

இது தான் பாருங்கோ "மாஃபியா" எண்டுறது. என்னதான் காசைக் கொட்டித்தான் சிகிச்சை எடுக்கிறம் எண்டாலும், காட்டுற நேரத்தில இருந்து, குடுக்குற மருந்து வரை தீர்மானிக்கிறது "மாஃபியா" க்காரர் தான்!!!

நரமுனி

# கிளிநொச்சி மக்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை விடுக்கும் அறிவித்தல்



தற்போது நிலவி வரும் அதிக வெப்பமான நிலைமை காரணமாக பொது மக்களின் நீர்ப் பயன்பாடு வழமைக்கு மாறாக அதிகரித்து காணப்படுகிறது. இதன் காரணமாக நாளாந்தம் அதிக நீரை சுத்திகரித்து வழங்க வேண்டிய நிலைமை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு ஏற்பட்டுள்ளது.

மக்களின் நீர்ப் பாவனை தினமும் அதிகரித்துச் செல்கிறது. அவ்வாறு அதிகரித்துச் செல்லும் அளவுக்கு ஏற்ப சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்குவதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்பு கொள்ளளவை விட அதிக நீர்ப் பாவனையும் தேவையும் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தினமும் தேவையான அளவு நீரை பொது மக்களுக்கு வழங்குவதில் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது, என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் இந்நிலைமையினை கருத்தில் கொண்டு நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர், எனத் தெரிவித்துள்ள அவர்கள் இந்நிலைமை தொடர்ந்தும் காணப்படுமாயின் வரும் நாட்களில் நீர் விநியோக நடவடிக்கைகள் சுழற்சி முறையில் வழங்கும் நிலைமை ஏற்படும் எனவும் அறிவித்துள்ளனர். (02)

# வவுனியா நகர பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 நடப்பு வருடத்திற்கான இரண்டாவது வவுனியா நகரப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேசச் செயலகக் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் கமலனின் நெறிப்படுத்துதலில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது. குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிராம மட்ட அபிவிருத்தி மற்றும் மக்களின் தேவைப்பாடு சம்பந்தமாக கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவாட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தான், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் குலசிங்கம் திலீபன், திணைக்களத் தலைவர்கள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப்பலரும்கலந்து கொண்டிருந்தனர்.






## உலகத் தொழிலாளர் தினத்தையொட்டி கல்முனை மாநகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு கௌரவமளிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற மே தின நிகழ்வுகளின் போது சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எம்.எம்.முபாரக் கல்முனை மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 80 பேருக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக், வர்த்தகர் அல்ஹாஜ் எம். மீராசாஹிப், அரச திணைக்கள அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## பிரதிக்கல்விப்பணிப்பாளருக்கு நேற்று பிரியாவிடை நிகழ்வு!



(காரைதீவுச் செய்தியாளர்)

சம்மாந்துறை வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளராக ஆறு வருடங்கள் கடமையாற்றிய ஏ.எல்.அப்துல் மஜீத் அக்கரைப்பற்று வலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதையிட்டு பிரியாவிடை வைபவம் நடை பெற்றது.

சம்மாந்துறை வலய நிர்வாகத்திற்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.எம்.யசீர் அரபாத் மொகைடீன் தலைமையில் நேற்று (30) செவ்வாய்க்கிழமை இந்த பிரியாவிடை நிகழ்வு பணிமனை யின் கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

அச்சமயம் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி ஏசி.நுஸ்ரத் நிலோபரா, எச்.நைஷரூஸ்கான், பி.பரமதயாளன் ஆகியோரும் பிரசன்னமாக இருந்தார்கள்.

சம்மாந்துறை வலய கல்வி சார் உத்தியோகத்தர்களின் நலன்புரி ஒன்றிய தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா நிகழ்வினை நெறிப்படுத்தி தொகுத்தளித்தார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் மஜீத் சம்மாந்துறை வலய கல்வி வளர்ச்சியில் ஆற்றிய அருஞ் சேவைகளை பாராட்டி அங்கு பலராலும் பேசப்பட்டது.

பணிப்பாளர்களுடன் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம் எம் எம். ஜௌபர், வளவாளர் எஸ் எல்.அப்துல் முனாப் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

இறுதியில், இடமாற்றலாகும் பணிப்பாளர் மஜீத் ஏற்புரையாற்றினார்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்: தொலைபேசி ஊடாகவோ: WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!